# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 22.05.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹூத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் 53:33 வசனத்தை ஓதிய பிறகு கூறினார்கள்:**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

நான் மிகவும் தூய்மையானவன் என்று ஒருபோதும் வாதம் செய்யாதீர்கள்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான். **ஃபலா துஸக்கா அன்புஸகும்** – உங்களை நீங்களே தூய்மையாளர்கள என்று கூறாதீர்கள். இறையச்சம் உள்ளவர் யார் என்று இறைவனே அறிகிறான். (53:33)

எனவே தூய்மையானவராக இருப்பது தக்வா என்ற நிபந்தனைக்குட்பட்டதாகும். தக்வா என்பது என்ன? எல்லா விதமான தீமைகளிலிருந்து இறைதிருப்தியைப் பெறும் பொருட்டு விலகியிருத்தல், இறைவன் கட்டளையிட்டவைகளைச் செய்தல், இறைவன் விலகியவற்றிலிருந்து விலகியிருத்தல் என்பதாகும். இறைவன் மீண்டும் மீண்டும் திருக்குர்ஆனில் கூறுகிறான். நான் உங்களை தூய்மைப்படுத்துகிறேன். யாருடைய உள்ளத்தில் உண்மையான தக்வா நிறைந்துள்ளது என்று அறிகிறேன். எந்த அளவுக்கு மனத்தூய்மை ஏற்பட்டுள்ளது என்று அறிகிறேன். அல்லாஹ்வே உள்ளத்தின் நிலையை அறிகிறான். நாம் வெளிப்படுத்துவதையும் அறிகிறான். நாம் மறைப்பவற்றையும் அறிகிறான். அல்லாஹ்வை எவ்வகையிலும் ஏமாற்ற இயலாது.

ஹதீஸில் வருகிறது. அமல் என்பது நிய்யத்தைப் பொருத்தது. இறைவன் உள்ளத்தின் நிலையை அறிகிறான். அவன் அடியார்கள் அமல் செய்யும் போது அதன் நிய்யத்தை நன்றாக அறிந்துள்ளான். வெளிப்படையாக நன்மை செய்பவர்கள், இபாதத் செய்பவர்கள், நோன்பு வைப்பவர்கள் ஏன் பலமுறை ஹஜ் செய்பவர்கள் இருக்கின்றனர். ஆனால் அல்லாஹ்வின் பார்வையில் அவ்வாறு செய்பவர்களின் நிய்யத்தில் குறை இருக்கும் எனில் அந்த நற்செயல்கள் ஏற்கத்தக்கவையல்ல. அந்த இபாதத்துகள், நன்மைகள் எல்லாம் ரத்து செய்யப்படுவது மட்டுமின்றி அவரது அழிவிற்கே கூட காரணமாக அமைந்து விடுகின்றன. அதைப்பற்றி திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகிறான். எச்சரிக்கைகள் மூலமாக அல்லாஹ் நம்மை அச்சமூட்டுவதும், கவனமாக இருக்குமாறு அறிவுறுத்துவதும் இறைவன் நம்மீது செய்துள்ள பெரும் கருணையாகும். அந்த வேளையில் தனது பரந்த ரஹ்மத்தைப் பற்றி கூறி மன்னிப்பிற்கான எதிர்பார்ப்பையும் நம்மிடையே தருகிறான். அல்லாஹ் நம்மை நேர்வழியில் நடத்தவும், நம்மீது ஒரு கருணையாகவும் அச்சமூட்டி எச்சரிக்கும் கட்டளைகளை அருளியுள்ளான். அல்லாஹ் உள்ளங்களின் நிலையை நன்றாக அறிபவனாவான். அல்லாஹ்வுக்கு நமது தகுதி தராதரங்கள் நன்றாகத் தெரியும். எனவே நீங்கள் தக்வாவை உள்ளத்தில் கொண்டிருங்கள். நிய்யத்தை தூய்மையாக்குங்கள். உங்களது அமலை இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக செய்யுங்கள். அவ்வாறு செய்தால் உங்கள் தவறுகளை தனது மக்ஃபிரத்தின் போர்வையால் மூடி மறைத்து விடுவதாக நற்செய்தியும் வழங்கியுள்ளான்.

நான் ஓதிய வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான். அதன் மொழிபெயர்ப்பு இதுவாகும்.

(அதாவது) மிகச் சிறிய குற்றங்களைத் தவிர பெரும் பாவங்களிலிருந்தும், தீய நடத்தைகளிலிருந்தும் விலகிக் கொள்பவர்கள். (அறிந்து கொள்ளுங்கள்). நிச்சயமாக உமது இறைவன் மிக்க மன்னிப்பவனாவான். அவன் உங்களைப் பூமியிலிருந்து படைத்த நேரத்திலிருந்தும் நீங்கள் உங்கள் தாய்களின் வயிற்றில்

மறைவாக இருந்த நேரத்திலிருந்தும், அவன் உங்களை நன்கு அறிகின்றான். எனவே நீங்களே உங்களைத் தூயவர்களென்று கூறிக்கொள்ளாதீர்கள். (உண்மையான) இறையச்சமுடையவர்களை அவன் நன்கு அறிகின்றான். (53:33)

இந்த வசனத்தில் அல்லாஹ் பெரும் பெரும் பாவங்களிலிருந்து விலகி இருக்குமாறு கூறுவதுடன் சாதாரண சிறிய தவறுகளையும் விட்டு விலகுமாறு கூறி தனது பரந்த கருணையைக் குறிப்பிட்டுள்ளான். மேலும் அல்லாஹ் கூறுகிறான். உங்கள் அந்தரங்க உணர்வுகளையும் அல்லாஹ் நன்கறிகிறான். எந்த அளவுக்கு அவனுக்கு அவற்றைப் பற்றி தெரியும் எனில், அதன் உச்சகட்ட எல்லை வரை குறிப்பிட்டு விட்டான். இப்பூமியில் வாழ்வாதாரங்கள் உருவாக பல்லாண்டுகள் முன்பே அவனுக்கு இன்றியமையாத தேவைகளுக்குரிய சாதனங்களை ஏற்பாடு செய்தான். மனித வாழ்வு நிலைத்திருப்பதற்கு அவை மிகவும் அவசியமானவையாக இருந்தன. அவ்வாறு வாழ்வாதாரங்கள் தோன்றும் முன்பிருந்தே அல்லாஹ் உங்களை அறிகிறான்.

என்னென்ன இயல்புகளையும் தகுதிகளையும் உங்களுக்கு வழங்க வேண்டும் என்று அறிந்திருந்தான். இது ஒரு ஆழமான கருத்தாகும். அதனைப் பற்றி மற்றொரு இறைவசனம் நமக்கு வழிகாட்டுகிறது. எவ்வாறிருப்பினும் அல்லாஹ் இந்த வசனத்தில் கூறுகிறான். அவன் உங்களைப் பற்றி மிக ஆழமான முறையில் தெரிந்து வைத்துள்ளான். உங்கள் பிறப்பு, வளர்ப்புகள் அனைத்தையும் அறிகிறான். அவன் எந்த அளவுக்கு இவற்றை அறிகிறான் என்பதை முற்றிலும் நாம் சூழ்ந்தறிவது என்ற பேச்சுக்கே இடமில்லை. அவற்றைப் பற்றி ஓரளவு அறிவும் கூட மனிதனுக்கு இல்லை. இக்கால அறிவியல் இப்பிரபஞ்சத்தின் படைப்பு பற்றி சிறிது கூறுகிறது அவர்கள் கூறுவதை விளங்குவதற்கும் கூட ஒரு சிறப்பான அறிவு மனிதனுக்கு தேவைப்படுகிறது. இறைவன் கூறுகிறான். உங்கள் தகுதி என்ன? எந்த அளவுக்கு உங்களால் சாதிக்க முடியும் என்பதை நான் அறிவேன். மேலும் செயலின் பின்னால் உள்ள நிய்யத்தையும் அறிவேன். அதன்கீழ் அல்லாஹ் இக்கருத்திற்கு ஒரு உதாரணமும் தந்துள்ளான்.

உங்கள் வளர்ச்சிகள் உங்கள் தாய்மார்களின் வயிற்றில் ஆரம்பிக்கின்றன. அதனைப் பற்றி பலருக்கு தெரியும். ஆனால் இறைவன் கூறுகிறான். நீங்கள் உங்கள் தாய்மார்களின் வயிற்றில் கருவாக இருந்தபோதே உங்கள் உடல் உறுப்புகள் வளரத் தொடங்கிய போதே உங்களைப் பற்றி எனக்கு தெரியும். இக்கால முன்னேற்றமடைந்த நாடுகள் முன்னேற்றமடைந்து கொண்டிருக்கும் நாடுகள் அறிவியல் முன்னேற்றத்தால் கருவில் இருக்கும் குழந்தைகளின் செயல்பாடுகளைப் பற்றி தெரிந்து கொள்கின்றன. பிறக்கப்போவது ஆண் குழந்தையா? பெண் குழந்தையா? என்று அறிகின்றனர். முடிந்தவரை மருத்துவர்கள் கூறுகின்றனர் என்றபோதிலும் 100% சரியாக கூறிவிட முடியாது.

எவ்வாறிருப்பினும் அல்லாஹ் கூறுகிறான்: நீங்கள் பிறக்கும் முன்பே நீங்கள் என்னென்ன தகுதிகளோடு பிறக்கப்போகிறீர்கள் என்று அல்லாஹ்வுக்கு தெரியும். எவ்வளவு காலத்திற்குப் பிறகு உங்கள் வாழ்வின் இலக்கை நீங்கள் பூர்த்தி செய்வீர்கள் என்றும் தெரியும். ஆனால் மறைவானவற்றை அறிபவனாக அவன் இருந்தும் அடியார்களுக்கு நன்மை தீமைகளை விளங்கி செயல்படும் ஒரு சூழ்நிலையை ஆயத்தம் செய்துள்ளான். ஒருவர் நற்செயல் செய்தால் நற்கூலி பெறுவார். தீய செயல் செய்தால் இறைவனது பிடியின்கீழ் வந்து விடுவார். **நற்செயல் என்றால் என்ன? அது குறிப்பாக அல்லாஹ்வுடைய திருப்தியைப் பெறுவதற்காக செய்யப்படும் முயற்சியாகும்.** இறைவன் கூறுகிறான். நீங்கள் ஒரு நற்செயல் செய்தால் அப்போதும்கூட உள்ளத்தில் சிலவேளை சுயநலம் உருவாகி விடுகிறது. எனவே ஒரு நற்செயல் செய்தபிறகும் கூட நாம் நற்செயல் செய்பவர் என்று முடிவு செய்து விடுவது உங்கள் பணியல்ல. மாறாக நற்செயல் செய்வது எந்த நிய்யத்தில் செய்யப்படுகிறது? நல்ல நிய்யத்தில் செய்யப்பட்டால் அவனது திருப்தியை பெற அது காரணமாக இருக்கின்றது. எந்த நிய்யத்தில் நற்செயல் செய்யப்படுகிறது என்று

அல்லாஹ்வுக்கு தெரியும். எனவே அவன் கூறுகின்றான். ஒரு நற்செயலைச் செய்து விட்டு அதனை சொல்லிக் கொண்டு திரிவதை விட்டு விட்டு ஒவ்வொரு நற்செயலையும் நீங்கள் செய்யும்போது அது உங்கள் தக்வாவில் உங்களை மேம்படுத்துவதாக அமைய வேண்டும். இறைவன் கூறுகிறான்: தக்வாவில் நிலைத்து நிற்பதற்கான சான்றிதழை மனிதன் தனக்குத்தானே வழங்கிக் கொள்ள இயலாது. அல்லது அவ்வாறு மற்றவருக்கும் தக்வாவின் சான்றிதழ் வழங்குவது எந்த அடியாரின் வேலையும் அல்ல.

மாறாக இது இறைவனது வேலையாகும். அல்லாஹ் எல்லாரையும் விட நன்றாக முத்தகீ – இறையச்சம் உள்ளவர் யார் என்பதை அறிகிறான். இங்கு ஒரு விஷயத்தை தெளிவுபடுத்துவது அவசியமாகும். அந்த வசனத்தின் ஆரம்பத்திலேயே அல்லாஹ் அதை கூறுகிறான்.

மிகச் சிறிய குற்றங்கள் தவிர பெரும் பாவம் தீய நடத்தைகளிலிருந்து விலகி இருப்பவர்கள் (53:33). இங்கு லமம் – சிறிய குற்றங்கள் என்றால் என்ன? சிலரை நாம் பார்த்திருக்கிறோம். இதன் சரியான பொருளை அவர்கள் உணரவில்லை. நமது குற்றங்கள் சில நேரங்களில் அப்படி இப்படி நிகழ்ந்து விட்டாலும் பரவாயில்லை என்று கருதுகின்றனர். மாறாக, இதன் பொருள் மனதன் பலவீனமானவன். சில வேளைகளில் அவன் அறியாமல் அவனிடம் சில பாவங்கள் வெளிப்பட்டு விடுகின்றன. அவ்வாறு நிகழ்ந்து விட்டால் பிறகு உண்மையான மனவருத்தம் அவனிடம் உருவாக வேண்டும். அதிகமாக இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். லமம் என்பதன் பொருள், பாவத்தின் பக்கம் குனிய வாய்ப்பு கிடைத்தும் அதனால் ஒரு சாதாரண நிலையிலுள்ள ஒரு தவறு தற்காலிகமாக அவரிடம் வெளிப்படுவதாகும். அதுவும் தற்காலிக தவறாக வெளிப்பட்டு விடுகிறதே தவிர அத்தவறு அவரிடம் நிரந்தரமாக தங்கி விடுவதில்லை. அதன் ஒரு பொருள் இதுவும் ஆகும். ஒருவரிடம் **ஷ**ய்த்தானிய எண்ணங்கள் மனதில் தோன்றும்போது அல்லாஹ்வின் அருளால் அவர் அதிலிருந்து தப்புவதாகும். அந்த **ஷ**ய்த்தானிய எண்ணம் அவன் மனதில் எந்த அழுத்தமான தாக்கத்தையும் பதித்துவிட முடியாது. மனித இயல்பை கவனத்தில் கொண்டவாறு இறைவன் அவ்வாறு கட்டளையிட்டுள்ளான். மனிதனுக்கு நன்மையும் தீமையும் செய்வதற்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. சமுதாயத்தில் அந்த தீமையை அகற்ற முயற்சியும் செய்யப்படுகிறது. உதாரணமாக வெட்கமின்மை காணப்படுகிறது. சமுதாயத்தில் நல்லொழுக்க சீர்கேடு பரவியுள்ளது. இதனால் ஏதாவது தீமை மனிதனிடத்தில் ஏற்பட்டு விட்டால் மனிதன் இஸ்திக்ஃபார் செய்து உடனே அந்த தீமையிலிருந்து தப்பிக்க முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் மிகப்பரந்த மன்னிக்கும் தன்மை உள்ளவன். தவ்பாவை ஏற்பவன். அவன் தவ்பாவை அந்நிலையில் ஏற்றுக் கொள்கிறான். எனவே உண்மையான தக்வாவின் பக்கம் நம்மை இட்டுச் செல்கின்ற அந்நிலை நம்மிடம் உருவாக வேண்டும். இல்லையெனில் மனிதன் ஒரு சிறிய நன்மையை செய்து விட்டு அதில் பெருமை கொண்டு விடுகிறான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நீங்கள் மிகவும் தூய்மையானவன் என்று ஒருபோதும் வாதம் செய்யாதீர்கள். தூய்மையாவது தக்வாவின் வாழ்வில் வழிநடத்துவது ஆகியவை முழுக்க முழுக்க அல்லாஹ்விடம் உள்ளது.

எனவே அவன் முன்னால் குனிய வேண்டும். இந்த கருத்தை மேலும் தெளிவுபடுத்தியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான். **ஃபலா துஸக்கூ அன்ஃபுஸக்கும்** (53:33) இதன் சரியான பொருளை அறிவதற்கு மனிதன் மனத்தூய்மை, இறை அருள் வெளிப்படுதல் இரண்டையும் தெரிந்திருக்க வேண்டும். இரண்டும் வெளிப்படையாக ஒன்றையொன்று ஒத்திருந்தாலும் உங்கள் முழுமைத் தன்மையை உங்களால் நடந்தது என்று கருதாதீர்கள். உங்களை ஒரு பொருட்டாக கருதாதீர்கள். அவனே உங்கள் மீது கருணை காட்டி உங்களுக்கு இந்த நன்மைக்கான வாய்ப்பை வழங்கினான். அவ்வாறு நீங்கள்

இருந்தால் இறைவன் உங்களுக்கு மனத்தூய்மையை வழங்குவான். ஆனால் நீங்கள் முழுமை அடைவதற்கு உங்கள் ரப் தான் காரணம் என்று கருதுங்கள். ஒவ்வொரு நிஃமத்தும் அவன் வழங்கியதாகும். உங்கள் முழுமைத்தன்மையைப் பார்க்கும் போது உங்களை நீங்களே பெருமிதத்துடன் பார்க்காதீர்கள். மாறாக, எல்லா நிலையிலும் இறைவனது ஆற்றல், வல்லமை, கருணை, அருள்கள் போன்றவற்றை மட்டுமே பாருங்கள். நல்லவராக உங்களது நிலை இருப்பதை நீங்கள் காணும் போது உங்களை இறந்தவரைப் போன்று கருதுங்கள். இந்த உயர்நிலைமைக்கு நான்தான் காரணம் என்று ஒருபோதும் நினைக்காதீர்கள். இவ்வாறு இருப்பதே அல்லாஹ் நிஃமத்தை வெளிப்படுத்துவதாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய அரபி நூலாகிய ஹமாமத்துல் புஷ்ராவிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோளாகும் இது. அதன் மொழிபெயர்ப்பையே கூறினேன். எனவே இந்த நுட்பமான வித்தியாசத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் விளக்கியுள்ளார்கள். இன்னொரு இடத்தில் அல்லாஹ் கூறுகிறான். தூய்மையினை அடைபவர் தனக்காகவே தூய்மையடைகிறார்.(35:19)

பின்னர் இன்னோரிடத்தில் அல்லாஹ் கூறுகிறான்.

ஒவ்வொரு ஜுமுஆ தொழுகையிலும் நாம் அதனை ஓதுகிறோம். கத்அஃப்லஹ மன்த ஸக்கா (87:15) அதாவது எவர் தனது நஃப்ஸை தூய்மையாக்குவாரோ அவர் வெற்றி அடைந்து விட்டார். இந்த ஆயத்துகளின் மூலமாக உங்களது வெற்றி உங்கள் மனத்தூய்மையடைதலைப் பொறுத்தது என்று அல்லாஹ் கூறி விட்டான்.

நான் ஓதியதும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தெளிவுபடுத்தியதுமான இந்த வசனம் சூரா நஜ்ம் உடையது. அதனை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உள்ளத்தை தூய்மைப்படுத்த கட்டளை உள்ளது. அதற்காக முயற்சி செய்யுங்கள். ஆனால் நீங்கள் முயற்சி செய்து விட்டு நாங்கள் தூய்மையடைந்து விட்டோம் என்று வாதிக்க இயலாது. அல்லது இன்னென்ன அமல்களை செய்து தூய்மையாகி விடலாம் என்று கூற இயலாது.

எனவே இறைவனும் கூறி விட்டான். வமன்த ஸக்கா வஇன்னமா யத ஸக்கா லிநஃப்ஸிஹி – எவர் தூய்மையடைவாரோ அவர் தனக்காகவே தூய்மையடைகிறார். சூரா ஃபாத்திரின் முழு வசனம் இவ்வாறாகும்.

(அதன் பொருள்) சுமை சுமக்கும் ஒருவன் மற்றவனின் சுமையைச் சுமக்க மாட்டான். கனமான சுமை சுமத்தப்பட்ட (ஓர் உயிரான)து தன் சுமையைச் சுமக்க, எவரையாவது அழைத்தால், அவர் நெருங்கிய உறவினராக இருந்தாலும் சரியே, அதில் சிறிதும் அவர் சுமந்து கொள்ளமாட்டார். மறைவாகத் தம் இறைவனுக்கு அஞ்சி, தொழுகையை நிலைநாட்டுவோருக்கு மட்டுமே உம்மால் எச்சரிக்கை செய்ய முடியும். தூய்மையினை அடைபவர் தமக்காகவே தூய்மையினை அடைகிறார். மேலும் அல்லாஹ்விடமே திரும்பிச் செல்ல வேண்டியதிருக்கிறது. (35:19)

இங்கு ஒரு விஷயம் தெளிவாகி விட்டது. தனது ரப்பை மறைவிலும் பயப்படுபவர்கள் மட்டுமே நஃப்ஸை தூய்மையாக்குவார்கள். எனவே இத்தகைய ஒரு வழக்கம் ஏற்பட்டு விடும் எனில் தொழுகை மற்றும் இபாதத்துகள் நற்செயல்கள் எல்லாமே இறையச்சம் நிறைந்தவையாக இறை திருப்திக்காக செய்யப்பட்டவையாகி விடும். இந்த நிலை ஏற்படும் போது மனிதன் தானே தன்னை தூய்மையானவன் என்று கூற இயலாது. மாறாக ஒவ்வொரு நன்மை மற்றும் நன்மை செய்ய வாய்ப்பும் இறைவன் புறமிருந்து கிடைத்ததாக கருத வேண்டும். எனவே நஃப்ஸை ஆய்வு செய்தவாறு இந்நிலையில் தன்னை தூய்மைப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறு செய்தவாறு தக்வாவின் வழியில் நடப்பவரே அல்லாஹ்வின் பார்வையில் தன்னை தூய்மைப்படுத்தியவர் ஆவார். மேலும் வெற்றியடைந்தவர் ஆவார். எவர் நன்மைகளை தனது ஒரு சிறப்புத் தன்மையாக கருதுவாரோ அவரிடம் மனத்தூய்மை ஏற்படவில்லை. எனவே ஒரு மூஃமின் எப்போதும்

அல்லாஹ்வின் பயத்தை கைக்கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக நன்மைகளை தேடிக் கொண்டிருக்கிறார். இறைவன் கூறுகிறான்: தீமையிலிருந்து தப்பிக்க முயற்சி செய்வீர்கள் எனில் இறைவனே உங்கள் தீமைகளை அகற்றுவான். கண்ணியத்திற்குரிய இடத்தில் சேர்ப்பான். அதைக் குறித்து இறைவன் கூறுகிறான்: நீங்கள் இவ்வாறு பாவங்களிலிருந்து தப்பிக்க முயற்சி செய்வீர்கள் எனில் இறைவன் தானே உங்கள் தீமைகளை அகற்றி விடுவான். உங்களை கண்ணியத்திற்குரிய இடத்தில் சேர்ப்பான். இதனைக் குறித்து இறைவன் கூறுகிறான்:

உங்களுக்கு தடுக்கப்பட்ட பெரும் பாவங்களிலிருந்து நீங்கள் விலகிக் கொண்டால் நாம் உங்களின் (சிறு) குறைபாடுகளை உங்களை விட்டு அகற்றி விடுவோம். மேலும் பெரும் கண்ணியத்திற்குரிய இடத்தில் உங்களை நுழையச் செய்வோம். (4:32)

நான் முதலிலும் ஒருமுறை கூறி விட்டேன். திருக்குர்ஆனில் பெரிய பாவங்கள் என்ற வார்த்தையிருப்பதால் பெரிய பாவம், சிறிய பாவம் என்று பாவத்திலும் பல வரையறைகள் உள்ளன என்பதன்று. எந்த பாவத்தை விடுவது மனிதனுக்கு மிகவும் சிரமமமோ அது அவருக்கு பெரும் பாவமாகும். இறைவன் குறிப்பிட்டிருக்கிற பாவங்கள் தவிர மனிதன் சாதாரணமானது என்று கருதுகிற சில விஷயங்களை விட்டு விடுவது மனிதனுக்கு சிரமமானதாக இருக்கிறது. அவையும் பெரும் பாவங்களில் அடங்கும். எனவே இறைவன் கூறுகிறான். மறைவான முறையில் இறைவனுக்கு பயந்தவாறு உங்கள் நஃப்ஸை தூய்மைப்படுத்த முயலுங்கள். மனிதனுக்கு அல்லாஹ்விடம் பயம் ஏற்படும்போதுதான் பாவங்களின் மீது வெறுப்பு ஏற்படும். அப்போதுதான் இறைவனின் பார்வையில் மனிதன் தூயமையாளனாகிறான். மனிதன் இறைவனின் பார்வையில் தூய்மையாளனாக ஆகும்போது அது உண்மையில் கண்ணியத்திற்குரிய இடமாகும். அதில் மனிதன் தூய்மையாளன் என்ற முறையில் நுழைகிறான். அதுவன்றி தனது நன்மைகளை எடுத்துச் சொல்லி தன்னைத்தானே தூய்மையாளனாக காட்டிக் கொள்வதில் பயனில்லை.

இறைவன் திருக்குர்ஆனின் ஓரிடத்தில் மூஃமின்களின் அடையாளமாக கூறுகிறான்:

அத்தகையோர் பெரும் பாவங்களிலிருந்தும் தீய நடத்தைகளிலிருந்தும் விலகிக் கொள்வார்கள். அவர்களுக்கு கோபம் ஏற்படும் போது, அவர்கள் மன்னித்து விடுகின்றனர். (42:38)

இங்கு பாவங்கள், ஒழுக்கக்குறைவுகள் பற்றி கூறப்பட்டுள்ளது. அதிலிருந்து விலகியிருக்குமாறு கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்த பாவம் மற்றும் வெட்கக்கேடுகள், நல்லொழுக்க குறைபாடுகள் ஆகியவை கோபத்துடன் சேர்த்து கூறப்பட்டுள்ளன. கோபத்தை மக்கள் சாதாரண விஷயம் என்று கருதுகின்றனர். அவர்களுக்கு இதில் போதனை உள்ளது. இது அதிகமாகி அதிகமாகி பெரும் பாவங்களாகி விடுகின்றன. கோபம் ஒரு சாதாரண பாவமல்ல. அதனை கட்டுப்படுத்தாமல் அனுமதியற்ற இடத்தில் பயன்படுத்தப்படும் எனில் பெரும் பாவத்தின் பட்டியலில் இடம் பெறும். சில வேளை கோபம் வருகிறது. அவை அவரது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டு ஏற்படுவதில்லை. அனுமதிக்கப்பட்ட முறையில் ஏற்படுகிறது. அக்கோபத்தின் மூலம் சீர்திருத்தம் ஏற்படுவதற்காக அக்கோபம் காட்டப்படுகிறது. ஆனால் மனிதன் கோபத்தில் கட்டுப்பாட்டை இழந்து விட்டால் மனத்தூய்மை அகன்று விடுகிறது. எனவே நான் நற்செயல்கள் செய்கின்றேன். அந்த நற்செயல்கள் எனது கோபத்தின் பாவத்தை அழித்து விடும் என்று கருதுவது தவறு. இந்த எண்ணத்தை அகற்றி விடுங்கள் என்று இறைவன் கூறி விட்டான். உண்மையான மனத்தூய்மையை விரும்பினால் உங்கள் நல்லொழுக்க நிலையை சரியாக்குங்கள். இக்காலத்தில் கோபத்தைப் பற்றி பல புகார்கள் வருகின்றன. கோபத்தால் வீட்டில் சண்டைகள் ஏற்படுகின்றன. சில நேரங்களில் மனைவி கட்டுப்பாடு இழந்து விடுகிறாள். சில வேளை கணவன் கட்டுப்பாடு இழந்து விடுகிறான். சமுதாயத்தில் பல சண்டைகள் ஏற்படுகின்றன. விளையாட்டு மைதானத்தில் பல சண்டைகள் ஏற்படுகின்றன. சண்டையிடும் அளவுக்குப் போகாவிட்டாலும் சில நேரங்களில் சில செயல்களின் காரணத்தால் உள்ளத்தில் கோபம் நிறைந்து விடுகின்றது. பிறகு ஒருவர்

மற்றவருக்கு நஷ்டம் ஏற்படுத்த விரும்புகிறார். அல்லாஹ் கூறுகிறான். இதுவும் பெரும் தவறாகும். உள்ளத்தூய்மை ஏற்படுத்தும் வழியில் ஒரு பெரும் தடையாகும். இந்த தடை நமது வழியில் குறுக்கே நின்றால் வெற்றியின் பாதையை முழுமையாக கடக்க இயலாது. இறைவனது பார்வையில் கண்ணியத்திற்குரியவனாக அம்மனிதன் ஆக இயலாது. இறைவன் தெளிவுபடுத்தி விட்டான். பாவத்திலிருந்து தப்புபவருக்கு நான் கண்ணியம் தருவேன். எனவே இந்த நோக்கத்திற்காக ஒரு மூஃமின் முயற்சி செய்ய வேண்டும். அதன் மூலம் இறைவனது பெரிய மன்னிப்பில் பங்கு பெற்று அவனது திருப்தி என்ற சொர்க்கத்தில் நாம் நுழைய இயலும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நினைவில் கொள்ளுங்கள். உண்மையான தூய்மை என்பது தன்னைத் தூய்மைப்படுத்தியவன் வெற்றி பெற்றான் என்று இறைவன் கூறியுள்ளதைப் பேணுபவரேயாவார். அதுவே தூய்மையாகும். ஒவ்வொருவரும் தனது நிலையில் மாற்றம் ஏற்படுத்துவதை தமது கடமையாக கருத வேண்டும். தனது நிலையில் மாற்றம் ஏற்படுத்தவும் அல்லாஹ்வின் அருள் வேண்டும். அவனது அருளைப் பெறுவதற்கு நிரந்தரமாக அவன் முன் குனிய வேண்டிய அவசியம் உள்ளது. அவனிடம் உதவி கேட்க வேண்டும். அவனது கருணையை வேண்ட வேண்டும்.

இறைவன் கூறுகிறான்: எனது ரஹ்மத் எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது. பரந்து விரிந்தது. பிறகு கூறுகிறான். எனது மன்னிப்பும் கூட பரந்தது. எனவே நற்செயல் செய்ய முயற்சியும் செய்ய வேண்டும். அவனது பரந்த மன்னிப்பை வேண்ட வேண்டும். அப்போதுதான் வெற்றி பெறுவோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மனத்தூய்மையை பெறும் வழியைப் பெறுவதற்கு வழிகாட்டியவாறு கூறுகின்றனர். அது நீண்ட ஒரு மேற்கோள். ஆனால் ஒவ்வொருவரும் கேட்பது அவசியமும் ஆகும்.

மனிதனுக்குரிய இன்னொரு சிரமம் என்னவெனில் மனிதன் பெரும் பெரும் பாவங்களைக் கூட விட்டு விடுகின்றான். ஆனால் சில தீமைகள் மிக நுட்பமாக இருக்கின்றன. மனிதன் கஷ்டப்பட்டுதான் அதனை தன்னிடம் இருப்பதாக அறிய முடியும். பிறகு அதனை விடுவது மிக மிக சிரமமான காரியமாகும். அதற்கு ஓர் உதாரணம் சில நோய் உள்ளிருந்து கொண்டே மனிதனை தின்றுகொண்டிருக்கின்றன. டைபாய்டு, T.B போன்ற நோய் உள்ளுக்குள் இருந்து கொண்டே மனிதனை அழிக்கின்றன. சிகிச்சையும் மிக சிரமமானது. அதுபோன்ற சில மறைவான பாவங்கள் மனிதனை இறை திருப்தி அடைவதை விட்டும் தடுத்து விடுகின்றன. அடுத்தவருடன் பழகும் போது சில நல்லொழுக்க சீர்கேடுகள் மனிதனிடம் ஏற்படுகின்றன. இன்ன இன்ன விஷயங்களுக்காக உள்ளத்தில் பொறாமை, காழ்ப்புணர்ச்சி, காட்டுதல், பெருமை ஏற்பட்டு விடுகின்றன. தனது சகோதரரை அற்பமாக கருத வைக்கிறது. சில நாள்கள் சேர்ந்தாற்போல் தொழுது விட்டு, மக்கள் அதனை பாராட்டி விட்டால் உள்ளத்தில் ஒரு பெருமை உருவாகி விடுகிறது. அசல் நோக்கம் மாசற்ற தூய்மையாகும். அதுவோ அவரிடமிருந்து போய் விடுகிறது. இறைவன் மனிதனுக்கு செல்வம் தந்துள்ளான். அறிவு தந்துள்ளான். அல்லது குடும்ப பெருமை வழங்கியுள்ளான். உடனே அம்மனிதர் இது எல்லாம் இல்லாத தனது ஒரு சகோதரரை காணும் போது அற்பமாக கருதுகிறார். தனது சகோதரரின் பலவீனத்தை வெளிப்படுத்திக் காட்ட பேராசை கொள்கிறார். பெருமை பல்வேறு நிறத்தில் ஏற்படுகிறது. சிலருக்கு சில விதமாகவும் சிலருக்கு வேறுவிதமாகவும் ஏற்படுகிறது. உலமாக்கள் அதனை இல்ம் ரீதியாக வெளிப்படுத்துகின்றனர். அறிவு ரீதியாக குற்றம் கண்டு கற்பித்து தனது சகோதரரை வீழ்த்த நினைக்கின்றனர்.

சுருக்கமாக, ஏதாவது ஒரு வகையில் தனது சகோதரரை குற்றம் கண்டுபிடித்து இழிவுபடுத்தி நஷ்டம் விளைவிக்க நினைக்கின்றனர். இரவும் பகலும் அவரது குறையை கண்டுபிடிக்க முயலுகின்றனர். இத்தகைய நுட்பமான தவறுகளை அகற்றுவது மிகவும் சிரமமாகும். ஷரீஅத் இவ்விஷயங்களை அனுமதிக்கவில்லை. இந்த தீமைகளில் பொதுமக்கள் எவரும் பிடிக்கப்படுவதில்லை. எவர்கள் பெரும் பெரும் தவறுகளை செய்வதில்லையோ அவர்களிடம் இந்த நுட்பமான தவறுகள் ஏற்படுகின்றன. இவற்றிலிருந்து

தூய்மையடைவதும் மரணிப்பதும் ஒன்றுதான். இந்த தீமைகளிலிருந்து எதுவரை ஒருவர் விடுபடவில்லையோ அதுவரை மனத்தூய்மை முழுமையாக ஏற்படாது. மனிதன் தூய்மையடைந்த பிறகு இறைவனிடமிருந்து கிடைக்கக்கூடிய முழுமைகள் அத்தகைய மனிதனுக்கு கிடைக்காது. சிலர் இந்த நல்லொழுக்க குறையிலிருந்து விடுதலை பெற்று விட்டதாக கருதுகின்றனர். ஆனால் வாய்ப்பு கிடைத்தால் மனஎழுச்சி கிளர்ந்து விடுகிறது. பிறகு அவரிடமிருந்து பெரும் அசுத்தங்கள் வெளிப்படத் தொடங்குகின்றன. மனிதனால் அதனை நினைத்துக்கூட பார்த்திருக்க இயலாது. அப்போது தான் அம்மனிதன் தான் சிறிதும் தூய்மையைப் பெறவில்லை என்பதனை அறிய முடிகிறது. மனத்தூய்மை அவரிடம் ஏற்படவில்லை என்பதும் நல்லொழுக்க நிலையை தூய்மைப்படுத்துவது மிகவும் கஷ்டமான காரியம் என்பதும் தெரிய வருகிறது. இந்த மனத்தூய்மை இறையருள் இன்றி பெற இயலாது. **இறையருளை ஈர்ப்பதற்கும் அதே மூன்று அம்சங்கள்தான். முதலில் கடும் முயற்சி, இரண்டாவது துஆ, மூன்றாவது நல்லடியார்களின் அருகாமை.** இக்காலத்தின் இமாமாகிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மை சரியான வழியில் நடத்துவதற்காக இக்காலத்தில் இறைவன் அனுப்பினான். அன்னாரின் நூல்கள் சீர்திருத்தத்திற்காக மிகவும் பயன்தரக்கூடியவை. ஏனெனில் அவை திருக்குர்ஆனின் விளக்கவுரையாக விளங்குகின்றன.

சில நாட்களுக்கு முன் ஜெர்மனியில் இருந்து ஒரு பெண் எனக்கு கடிதம் எழுதினார். அல்லாஹ்வுடைய கட்டளையைப் படித்த பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களைப் படித்தேன். திருக்குர்ஆனில் விளக்கவுரையை படிப்பதாக உணர்ந்தேன். மீண்டும் திருக்குர்ஆனைப் படிக்கும்போது இறை கட்டளைகளின் முக்கியத்துவம் தெரிய வந்தது. அதற்கு முன் அவை எனக்கு புரிந்ததில்லை. நல்லடியார்களின் அண்மை கிடைப்பதின் பெரிய உபகாரம் இதுவாகும். எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூற்களை அதிகம் ஜமாஅத் படிக்க வேண்டும்.

மேலும் கூறுகின்றார்கள். மன அசுத்தங்களின் மீது அல்லாஹ்வின் அருள் இன்றி மரணம் வராது. மஃரிஃபத் – அல்லாஹ்வை அறிந்து கொள்ளுதல் என்ற நெருப்பு அவரிடம் உருவாகாத வரை அவை ஒழிய முடியாது. மஃரிஃபத் என்ற அந்த நெருப்பு நம்மிடம் உருவாகி விட்டால் பிறகு நஃப்ஸின் பலவீனங்ள் அழிந்து விடுகின்றன. நஃப்ஸின் பலவீனங்கள் ஒழிந்து விட்டால் பிறகு தான் பெரிய ஆளாக இருந்தாலும் தன்னை சிறியவராக கருதுகிறார். தனது இருப்பை ஒன்றுமற்றதாக கருதுகிறார். மஃரிஃபத்தின் மூலம் அவருக்கு கிடைத்த அவ்வொளிக்கு தனது எந்த சிறப்புத் தன்மையையும் அவர் காரணமாக்குவதில்லை. தன்னால்தான் தனக்கு இது கிடைத்தது என்று நினைப்பதில்லை. மாறாக அது இறைவனது அருள் என்று நம்புகிறார். இந்த தகுதி எல்லாரினும் அதிகமாக நபிமார்களிடம் காணப்படுகிறது. மற்றவருக்கு அவரது தகுதிக்கேற்ப உருவாகிறது. சிலர் இரண்டு நாட்கள் தொழுது விட்டு பெருமையடிக்கின்றனர். அல்லது நோன்பு, ஹஜ் போன்றவற்றால் உளத்தூய்மை ஏற்படுவதற்கு பதில் பெருமையும், காட்டுதலும் அவரிடம் உருவாகிறது.

நினைவில் கொள்ளுங்கள். பெருமை ஷய்த்தானிடமிருந்து வருகிறது. ஷய்த்தானே அதனை உருவாக்குகிறான். எதுவரை அது விலகவில்லையோ அதுவரை உண்மையின் வழியில் பெருமை ஒரு தடையாகவே நிற்கிறது. எவ்வகையிலும் ஒருவர் பெருமையடிக்கக் கூடாது. (ஷய்த்தான்) அறிவின் அடிப்படையிலோ, செல்வத்தின் அடிப்படையிலோ, அழகு அடிப்படையிலோ, குடும்பப் பெருமை, பாரம்பரியப் பெருமை அடிடப்படையிலோ பெருமை பாராட்ட வைக்கிறான். பெரும்பாலும் இக்காரணங்களால் மனிதனிடம் பெருமை ஏற்பட்டு விடுகிறது. மனிதன் இதுபோன்ற தீமைகளிலிருந்து தன்னை தூய்மைப்படுத்தாத வரை இறைவனின் பார்வையில் தேர்ந்தெடுக்கப்பட்டவராக முடியாது. மன கிளர்ச்சிகளை எரித்து விடக்கூடிய அந்த மஃரிஃபத் அம்மனிதனுக்கு வழங்கப்படாது. ஏனெனில் அம்மனிதனிடம் ஷய்த்தானின் பங்கு உள்ளது. இறைவன் அதனை விரும்புவதில்லை. ஷய்த்தான் தன்னை ஆதமை விட சிறந்தவராக கருதினான். ஷய்த்தான் அல்லாஹ்விடம் கூறினான். நான் அவரை விட சிறந்தவன்; என்னை நெருப்பால் படைத்துள்ளாய்; அவரை (ஆதமை) மண்ணால் படைத்தாய். (7:13)

இதனால் இறைவனின் பார்வையில் அவன் தள்ளப்பட்டவனாகி விட்டான். ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்களுக்கு மஃரிபத் வழங்கப்பட்டிருந்ததால் தன் பலவீனம் வெளிப்பட்டதும் அதனை ஒப்புக் கொண்டார். இறைவனது அருளுக்கு வாரிசாகி விட்டார். இறைவனது அருள் இல்லாமல் அது நடக்க முடியாது என்று அவர் அறிந்திருந்தார். எனவே அவர் துஆ செய்தார்.

எங்கள் இறைவா! நாங்கள் எங்களுக்கே அநீதியிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்து எங்களுக்கு கருணை காட்டாவிட்டால் நாங்கள் நஷ்டமடைந்தவர்களை சார்ந்தவர்களாகி விடுவோம். (7:24)

இதுவே உண்மையான மனத்தூய்மைக்கு அடிப்படை சூத்திரம் ஆகும்.

உண்மையான மூஃமினுக்கும் ஷய்த்தானின் பின் செல்பவருக்கும் இடையில் ஒரு வித்தியாசம் உள்ளது. ஷய்த்தானின் பின்செல்பவர்கள் நான் சிறந்தவன்; நானே பெரியவன் என்று முழக்கம் இடுகின்றனர். தமது பெருமையை பேசுகின்றனர். ஆனால் ஆதம் இதன் நுட்பத்தை விளங்கினார். அல்லாஹ் அவருக்கு வழங்கிய இறை ஞானத்தின் காரணத்தால் இவ்வாறு துஆ செய்தார்.

**ரப்பனா ளலம்னா அன்ஃபுஸனா வஇன்லம் தக்ஃபிர்லனா வதர ஹம்னா லனகூனன்ன மினல் காஸிரீன்** – எங்கள் இறைவா நாங்கள் எமக்கே தீங்கிழைத்துக் கொண்டோம். நீ மன்னித்து அருள்புரியவில்லை எனில் நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம்.

இந்த துஆவே இறைவனின் பரந்த அருளை ஈர்த்து வரக்கூடியது. தீமைகளிலிருந்து காப்பாற்றக்கூடியது. தவறுகள் தீமைகளின் மீது திரையிடக்கூடியது. அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுத்தரக்கூடியது. நாம் எப்போதும் நமது நஃப்ஸை கணக்கிடுவதற்கு வாய்ப்பு தருவானாக. ஒவ்வொரு நற்செயலையும் இறைவனுக்காக செய்பவர்களாவோமாக. எல்லா வகையான தீமைகளிலிருந்தும் தூய்மையாவோமாக. அதற்காக தொடர்ந்து முயற்சி செய்பவர்களாவோமாக. எப்போதும் இறைவனது பரந்த மன்னிப்பை வேண்டிக் கொண்டிருப்போமாக. அல்லாஹ் நமக்கு அதற்கான தவ்ஃபீக் வழங்குவானாக. ஆமீன்.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 22.05.2009

Translated by : **Muallim M. NISAMUDDIN**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**